RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s128

OPEN ACCESS

# புழங்குப் பொருட்களும் கலைமரபும்

பா. தமிழரசி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா

# Woodwork and Artistic Tradition

**P. Thamilarasi** [a, *]

[a] Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College (Autonomous), Sivakasi, Tamil Nadu, India.

* Corresponding Author: shakthithamil@gmail.com

Received: 13-03-2021
Revised: 24-01-2022
Accepted: 29-01-2022
Published: 25-02-2021

Check for updates

**ABSTRACT**

This article emphasizes the concern about the endangered trend of rural arts in today's commercialised world. Modern products also face an endangered trend, like some rural crafts. Our comfort is that the international powers have not yet seized the patent for rural products such as soil products. It is conceivable that artifacts are the mirror of culture and how people's feelings, values, ideologies, aesthetics, etc. are expressed in the objects of artisans who have converted through artifacts. The persistence of traditional rural handicrafts and the social identity issues of the artisan castes who make them must be known in conjunction with the context of today's social change. Have Tamils lived with ecological thinking and classification of the materials into the art tradition, the purpose of this article is to examine.


**Keywords:** Woodwork, tradition, tamil culture

## முன்னுரை

விஞ்ஞானத்தின் விளைவால் நாளும் தொழில் பெருகிப் புழங்குப் பொருள் வகையிலும் பயன்பாட்டிலும் புதுமை உருவாகி வருகின்றது. மானுடச் சமூகங்கள் எல்லாம் தாம் வாழும் சுற்றுச் சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்ப வாழ்ந்தாக வேண்டும். இந்தப் படிமுறையில் தத்தம் சொந்த நோக்கத்திற்கேற்ப இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும் கலைப் படைப்புக்களாகவும் மாற்றிக் கொள்வதையே புழங்குப் பொருள்சார் பண்பாடு என்கிறோம்.

## கைவினைக் கலைகள்

புழங்குப் பொருளுக்கும் மொழி உண்டு. மொழி வழியாகவும், பொருள் வழியாகவும் பண்பாட்டில் அர்த்தங்கள் வெளிப்படுகின்றன. பழங்குடிச் சமூகம் முதல் தொழில் முறைச்சமூகம் வரை புழங்குப்பொருட்கள் சமூகத்தின் வளர்ச்சி நிலைக்கேற்ப காணப்படுகின்றன. பொருளும் பண்பாடும் நாணயத்தின் இருபக்கம் கொண்டது. பண்பாட்டின் கண்ணாடி புழங்கு பொருள் எனலாம். புழங்குப் பொருள் பண்பாட்டினை கலை என்றும் கைவினை என்றும் பகுக்கலாம்.




## பொருள்சார் பண்பாடும் பொருள்சாராப் பண்பாடும்

பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடு (Material culture) என்றும், பொருள்சாரா பண்பாடு (Non - material culture) என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். மக்கள் அவர்களின் தேவைகளுக்காகச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருள்களும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். இயந்திரங்கள், கருவிகள், மரச்சாமான்கள், வீட்டுப்பொருட்கள், உடைகள், அணிகலன்கள், கட்டடங்கள், போக்குவரத்துச்சாதனங்கள், வேளாண் நிலங்கள், எழுதுகோல் அழகுப்பொருட்கள், போர்க்கருவிகள் போன்ற எண்ணற்ற பொருட்கள் பொருள்சார் பண்பாட்டைச் சேர்ந்தவை.

பொருள்சாராப் பண்பாட்டில் பொருள் வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம் பெறும். எ.கா. பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள், அழகியல்சிந்தனைகள், இசை, நடனம், உணவு உண்ணும்முறை, நம்பிக்கைகள், மந்திரங்கள் போன்றவை.

## தாய்த்தெய்வ வழிபாடு

புதிய கற்காலத்தில் தான் நிரந்தரமான குடியிருப்புகள் தோன்றின. புதிய கற்காலம் தான் பண்பாட்டு மானிடவியலில் தோன்றிய புதிய பண்பாட்டுப் புரட்சி எனலாம். தாய்த்தெய்வ வழிபாட்டில் சூலாயுதம் உண்டு. சூலாயுதம் புதிய கற்காலத்தில் தோன்றிய கருவி ஆகும். பெண்களே தங்கள் இருப்பிடங்களைச் சுற்றி உணவிற்குத் தேவையான பொருட்களை விளைவிக்கலாம் எனக் கருதினர் (Vivanantaraca, 2021).

## புழங்கு பொருட் பிரிவுகள்

பெரும்பாலான அறிஞர்கள் புழங்கு பொருட்பண்பாட்டை (art) என்றும் (craft) (கலை, கைவினை) என்றும் இரண்டு உட்பிரிவுகளாகக் காண்கின்றனர்.

புழங்குப் பொருள் பண்பாட்டில் குறிப்பிட்ட சில வகையான பொருட்கள் அன்றாட வாழ்க்கை சார்ந்த, சமூக, பொருளாதாரச் செயல்பாடுகளுக்கு நேரடியாக உதவக் கூடியவையாக உள்ளவற்றை craft என்று வகைப்படுத்திக் கொண்டனர்.

மற்றொரு பிரிவானது அழகியல் சார்ந்த, மகிழ்ச்சி தருகிற, அலங்காரத்தன்மை கொண்டதாக இனங்கண்டு அதனை 'art' என்று வகைப்படுத்திக் கொண்டனர் என்கிறார் ஹென்றி கிளாசி (Bhakthavatsala Bharathi, 2002).

## புழங்குப்பொருள் - கோட்பாட்டுப் பின்னணி

புழங்குப் பொருட்களைச் செய்யும் பல்வேறு தொழில்களின் ஆணும் பெண்ணும் எந்தெந்த வகையில் பங்கேற்கிறார்கள் என்னும் புள்ளியிலிருந்து தன் புரிதலைத் தொடங்குகிறார் புரோவர் (Bhakthavatsala Bharathi, 2002); (Jeyapal, 2004).

- பெண்கள் பங்கேற்கும் தொழில்கள்
- ஆணும் பெண்ணும் சமமாகப் பங்கேற்று செய்யும் தொழில்கள்

- ஆண்கள் மட்டும் செய்யும் தொழில்கள்

## பெண்கள் மட்டும் செய்யும் தொழில்கள்

பெண்களே மிகுதியாக ஈடுபடும் தொழில்கள் பல உள்ளன. முறம் கட்டுதல், கூடை முடைதல், பாய்பின்னுதல், மூங்கில் பொருட்கள் செய்தல், பிரம்பு வேலை, மரச்சீப்பு செய்தல், தாவரங்களின் நடுத்தண்டிலிருந்து கிடைக்கும் மென் சோற்றிலிருந்து மாலைகள், பூ வேலைகள், மலர் வளையங்கள், ஒப்பனை செய்தல் போன்ற தொழில்களில் பெண்களே ஈடுபடுகின்றனர்.

## ஆணும் பெண்ணும் சேர்ந்து செய்யும் தொழில்கள்

இவ்வகைத் தொழில்களில் பெண்கள் சில கட்டங்களில் மட்டும் பற்கேற்கின்றனர்.

- நெசவுத் தொழிலில் சில வேலைகள்.
- பானை வனைந்த பின்னர் மரச்சுத்தியால் தட்டுதல்.
- இரும்பைக் காய்ச்ச கை துருத்தி ஊதுதல்.
- சக்கரம் சுற்றித் துருத்தி ஊதுதல் போன்ற விளிம்பு நிலைப் பணிகளைச் செய்கின்றனர்.
- வடஇந்தியப் பெண்கள் கருமாதி தொழிலில் பங்கேற்கின்றனர்.

தமிழ்நாட்டிலும் சில பெண்கள் சுடுகாட்டுப் பணியால் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். எ.கா. ஆண்டாள் பிரியதர்ஷினி எழுதிய 'தகனம்' புதினம் (Andal Priyadarshini, 2005).

## ஆண்கள் மட்டும் செய்யும் தொழில்

- தச்சுத்தொழில்
- கல்தச்சர் (கல்லில் சிலை செய்யும்; தச்சர்)
- இரும்பு வேலை, பொன் வேலை

இவையாவற்றிலும் பெண்களுக்கான முதன்மையான பங்கேற்பு இல்லை. இங்குமங்கும் அருகிய நிலையில் பங்கேற்பது வட்டார வேறுபாடுகளாகக் கொள்ளத்தக்கவை என்கிறார் புரோவர் (Bhakthavatsala Bharathi, 2002).

பெண்கள் கடுமையான உழைப்புத் தேவைப்படும் செயல்களில் ஈடுபடமாட்டார்கள், பெண்கள் தீட்டு அடையும் பாலினத்தவர் என்பதால் இவ்வகையான செயல்களில் ஈடுபடமாட்டர்கள் என்ற கருத்துகள் கருதுகோள்களாக இது நாள் வரை இருந்தன என்பதை புரோவரின் ஆய்வை நோக்கும் போது புரிந்து கொள்ள முடியும்.

## மூலப்பொருட்கள்

பெண்கள் எவ்விதத் தடையும் இல்லாமல் பங்கேற்கும் பாய்பின்னுதல், நெசவுத்தொழில், மூங்கில் பொருட்கள் செய்தல், பிரம்பு வேலை செய்தல், ஓலைப்பெட்டி செய்தல் போன்றவற்றிற்கான மூலப்பொருட்களை எந்த ஊருக்குச் சென்று ஈட்டினாலும் அவை 'நாடு' என்று கருத்தாக்கம் பெறக்கூடிய பகுதிக்குள் அடங்குகிறது என்கிறார் புரோவர் (Bhakthavatsala Bharathi, 2002).

சதுப்புப்பகுதியில் கோரையும், ஆற்றங்கரையில் கோரையும் பிரம்பும், விளைநிலத்தில் பருத்தியும், தோட்டக்காலில் அல்லது ஆற்றங்கரையில் மூங்கிலும் விளைகின்றன. நாடு/ காடு என வகைப்படுத்திக் காணும் அறிதிறனில் 'நாடு' என்னும் பகுதிக்குள் அடங்குகிறது.

ஆணும் பெண்ணும் பங்கேற்கும் மட்பாண்டத்திற்கான மூலப்பொருட்கள் களிமண்ணாகும். நாடு, காடு சந்திக்கும் இடமான (மீவியல் களம்) ஏரி அல்லது களிமண் படுகையிலிருந்து இது பெறப்படுகிறது.

பெண்கள் முற்றிலும் பங்கேற்காத மூன்றாம் வகைத் தொழில்களான தச்சுவேலை, இரும்பு வேலை, சிற்பவேலை, பித்தளைப் பாத்திரவேலை, பொன் வேலை ஆகியவற்றுக்கான மூலப்பொருட்கள் 'காடு' எனக் கருத்தாக்கம் பெறும் பகுதியில் இருந்து பெறப்படுகின்றன.

## புழங்குப்பொருட்களும் நம்பிக்கையும்

காடு என்னும் பகுதியிலிருந்து பெறும் மூலப் பொருட்களிலிருந்து செய்யும் எல்லாக் கைவினைப் பொருட்களும் விஸ்வகர்மர்களால் தச்சுத் கழித்தல், திருஷ்டி கழித்தல் போன்ற சடங்குகள் செய்து காட்டுப் பகுதியில் வாழும் தீய ஆவிகளைப் பிரித்தப் பின்னர்ப் பயன்படுத்துவோர்க்குத் தரப்படுகின்றன. புதிதாகக் கட்டப்படும் வீடு, தோணி போன்றவற்றிற்கு நிகழ்த்தப்படும் தச்சுக் கழித்தல் சடங்கு காட்டு மரத்தில் தீய ஆவி உறைந்திருக்கும் என்ற எண்ணத்தால் செய்யப்படுவதாகும்.

நேர்த்திக் கடனுக்காகச் செய்யும் களிமண் பொம்மைகளில் கண் திறக்கும் சடங்கினைத் திருஷ்டி கழித்து ஆண்கள் தான் செய்கிறார்கள். தங்கத்தாலி செய்து அதனைச் சாமி முன் வைத்து வணங்கி கொடுக்கும் போது கூட அங்குப் பெண்கள் வருவதில்லை. இவ்வாறு மரம், கல், இரும்பு, பொன் போன்ற கச்சாப் பொருட்கள் 'காடு' என்னும் பகுதிக்குரியனவாகக் கருத்தாக்கம் செய்யபட்டுள்ளதால் அவற்றுடன் காட்டில் உலவும் தீய ஆவிகள் அடங்கியிருக்கலாம் என்பது பஞ்சகம்மாளர்களின் நம்பிக்கை. இந்நிலையில் காடு என்னும் பகுதியிலிருந்து தொழிலிலும் பெண்கள் முதன்மையாக ஈடுபடுவதில்லை என்ற அமைப்பாக்கம் வெளிப்படுகிறது.

## தொழில்நுட்பம்

பெண்கள் முழுவதுமாக ஈடுபடச் செய்யும் பாய்முடைதல், கூடை பின்னுதல், பிரம்பு வேலைகள் யாவற்றிற்கும் பயன்படும் கச்சாப்பொருள் நீர்நிலைகளை ஒட்டிய சதுப்பு நிலம், ஏரி குளம், ஆற்றங்கரையாக உள்ளது.

அவற்றைச் செய்யும் போது பட்டைகளை வளைத்து முடைவதற்கு நீர் தெளித்து இணக்கத்துடன் வளைக்கப்படுகிறது. 'நீரே' பெண்கள் செய்யும்; பொருட்களுக்கு அடிப்படையாக உள்ளது.

இதற்கு நேர்மாறாக, இரும்பைக் காய்ச்சி அடிப்பதற்கும், வனைந்த பச்சை மட்பாண்டங்களைச் சுடுவதற்கும் பித்தளை, பொன் போன்ற நகைகளைச் செய்ய அவற்றை உருக்குவதற்கும் 'நெருப்பு' இன்றியமையாததாக உள்ளது. ஆக, ஆண்கள் நெருப்பையும் பெண்கள் நீரையும் அடிப்படையாகக் கொண்டு புழங்கு பொருட்கள் உற்பத்தியில் ஈடுபடுகின்றனர்.

## கருவிகள்

பெண்கள் ஈடுபடும் தொழில்களில் மூங்கில், பனை ஓலை, கோரை, பிரம்பு போன்ற மூலப்பொருட்களை வெட்டுதல், பிளத்தல், சீவுதல் ஆகியன மட்டுமே அடிப்படையான செயல்கள். இச்செயல்களைச் செய்ய அடிப்படையாக ஒரு கத்தி இருந்தால் போதுமானது. ஆண்கள் செய்யும் தொழிலுக்கு சுழற்சித்தளத்திலும் இயங்கும் ஆயுதம் பயன்படும். (சக்கரம் போன்றவை)

கத்தி என்பதைப் பரந்த பொருள் கோடலுக்கு உட்படுத்துகிறார் புரோவர். அனைத்துத் தாய் தெய்வங்களும் கத்தி ஏந்தியிருப்பது கவனத்தில் கொள்ள வேண்டும். ஆண்களின் உருவகமாக இருக்கும் கத்தியைப் பெண்கள் தங்கள் வசம் வைத்திருப்பதும் பெண்களின் உருவகமாக இருக்கும் மண்வனையும் சக்கரம், தறி போன்ற பெண் உருவகக் கருவிகளை ஆண்கள் தங்கள் வசம் வைத்திருப்பதும் சில அமைப்பாக்கங்களாகும் என்கிறார் புரோவர் (Bhakthavatsala Bharathi, 2002).

## பயன்படும் தன்மை, உழைக்கும் காலம்

- பெண்கள் செய்யும் புழங்குப் பொருட்கள் (பாய், கூடை, முறம்) ஓலைப்பெட்டி போன்றவை) நீண்ட காலம் உழைக்காதவை.
- இவர்கள் தொடர்ந்து உழைத்து மீண்டும் மறு உற்பத்தியில் ஈடுபடும் தேவையைக் கொண்டுள்ளனர்
- ஆண்கள் செய்யும் மரம், இரும்பு, பித்தளை, பொன் பொருட்கள் காலத்தால் விரைந்து அழியாதவை.
- ஆண்கள் மறு உற்பத்தித்திறன் தேவைப்படாத தொழிற்பாகுபாட்டைக் கொண்டுள்ளார்கள்.

மேலும் பெண்கள் செய்யும் வேலை சமூகத்தில் மதிப்பற்றதாக உள்ளது.

## இலக்கியப்பதிவுகள்

மண்ணால் செய்யப்பட்ட பானையை 'குழிசி' என்று கூறுவர். இந்தக் குழிசியை மக்கள் வீடுகளில் உணவு சமைப்பதற்குப் பயன்படுத்தி உள்ளனர். இதனைக்,

கயறு பிணிக் குழிசி

மான்றடி பழக்கிய புலவு நாறு குழிசி

முரவுவாய்க் குழிசி முறியகும் பேற்றி என்ற பாடல் வழி அறியமுடிகின்றது (Jeyapal, 2004; Rasamanikam, 1947).

அகநானூற்றில் பொலங்கலம் (பா.9), கொடுவாய் இரும்பு (பா.36), குழிசி (பா.77), உலக்கை (பா.9), இரும்பு (பா.90), முத்து மாலை (பா.117), உடுக்கை (பா.235) போன்ற புழங்கு பொருட்கள் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகின்றது. 'வள்ளம்' என்பது வட்டில் கிண்ணம் போன்று உட்பகுதி குழிந்து இருக்கும் (Nallamuthu, 2021). இந்த வட்டில் பால், மோர், கள் ஆகிய நீர்ப்பொருட்களை உண்ணுவதற்குப் பயன்பட்டது. இதனைப்,

"பால்பெய் வள்ளஞ் சால்கை பற்றி

எம்பாடுண்டனை பாயன்"

என்ற பாடலடி மூலம் அறிந்து கொள்ளலாம் (Rasamanikam, 1947).

## அகழாய்வுப் பதிவுகள்

அழகன் குளம் கோட்டைமேடு என்னும் பகுதியில் தமிழ்நாடு தொல்லியல் துறையினரால் கண்டெடுக்கப்பட்ட பாகை ஓட்டில் கீறி வரையப்பட்ட கோட்டோவியம் ஒன்று இருந்தது. இதை ஆய்வு செய்த தொல்லியலாளர்கள் இவ்வோவியம் ரோமானியக்கப்பல் என்றும், சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் உறுதிப்படுத்தினர். பல்லாயிரம் மைல் தொலைவில் நடந்த வணிகத்துக்கு 16 சென்டிமீட்டர் அகலம் கொண்ட ஒரு பானை ஓடு தான் சாட்சி. மண்பானையின் மகத்துவம் சமையலில் மட்டும் அல்ல, சரித்திரத்திலும் உள்ளது. யவனர்கள் தமிழ்நாட்டில் நடத்திய கடல் வணிகம் குறித்து பல்வேறு சான்றுகள் உள்ளன. புறநானூறு, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம் உள்ளிட்ட பல சங்க இலக்கிய நூல்களில் தமிழ்ப் புலவர்களும், கிரேக்கத்தைச் சார்ந்த பெரிபுளஸ், பிளினி, தாலமி ஆகியோரும் இந்த வர்த்தகத்தைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளனர். இவற்றை உறுதிப்படுத்தும் தொல்லியல் ஆதாரங்களில் ஒன்று தான் அழகன்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓட்டு ஓவியம்.

## ஈட்டி

தொடக்ககால அரசுகளின் வலிமை மிகுந்த போர் ஆயுதமாக ஈட்டிகளே இருந்தன. போர்

முனையில் ரோமானியர்கள் அடைந்த வெற்றிகள், அதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் நினைவில் நிற்கும்படி அமைந்ததற்கு முக்கிய காரணம், அவர்கள் வடிவமைத்த ஈட்டிகள். பிற நாட்டு வீரர்கள் 8 அடி அல்லது 10 அடி உயரம் உள்ள ஈட்டிகளைத்தான் பயன்படுத்திக் கொண்டு இருந்தனர். ரோமானியர்கள் புதிய ஈட்டி ஒன்றை வடிவமைத்தனர். அதன் நீளம் 21 அடி. அது வரை உலக வரலாற்றில் இல்லாத ஒரு புதிய வடிவம் தாங்கிய ஈட்டியுடன் அவர்கள் யுத்தக்களம் புகுந்தனர். பாய்ந்து வரும் ரோமானியப் படை வீரனின் குதிரைக்கு, 21 அடிக்கு முன்னாலே எதிரியின் நெஞ்சுக்குள் ஈட்டிமுனை பாய்ந்து உள்ளே இறங்கியது.

## சூழலியல் சார்ந்த சிந்தனை

சங்ககால மக்கள் இயற்கையினைத் தங்களின் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி உள்ளனர். இயற்கையாகக் கிடைக்கும் தாமரையிலை, தேக்கிலை ஆம்பலிலை, வாழையிலை, பனையோலை, மூங்கில் ஆகியவற்றைக் கலன்களாக உணவு உண்பதற்கு ஏற்புடையதாக வடிவமைத்து பயன்படுத்தி உள்ளனர்.

தேக்கு மரத்தின் இலைகளைப் பயன்படுத்தி உணவு உண்ணும் வழக்கம் தற்போது கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களிடம் காணப்படுகின்றது. சங்ககால மக்களும் தேக்கிலையினை உண்கலமாகப் பயன்படுத்தி உள்ளனர். இதனை,

“சேக்குவள் கொல்லோ தானே தேக்கின்

அகலிலை குவிந்த புதல்போல் குரம்பை

ஊன்பு முக்கயரு முன்றில்”

என்றப் பாடலடிகள் மூலம் அறியலாம். மேலும், பயணம் மேற்கொள்ளும் போது வழியில் உணவு உண்ணும் போதும் தேக்கிலை மிகவும் உதவியாக இருந்துள்ளது (Rasamanikam, 1947).

இயற்கையில் கிடைக்கும் மற்றொரு பொருள் மூங்கில். இதனையும் கலன் போன்று பயன்படுத்தி உள்ளனர். இன்னும் கிராமபுறத்தில் மூங்கிலின் பயன்பாட்டைக் காணமுடிகின்றது. மாடுகளுக்கு மருந்து கொடுப்பதற்கு மூங்கிலைக் கணுவின் மேற்பகுதியில் வெட்டி பயன்படுத்துகின்றனர். ஏணியாகவும் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். பழந்தமிழர்கள் மூங்கில் குப்பிகளிலே மதுவினை நிரப்பி முற்ற வைத்து பின்எடுத்து உண்டு விட்டு குரவைக் கூத்தினைக் கண்டு களித்துள்ளனர். இதனை,

“வாங்கமை பழனிய நறவுண்டு

வேங்கை மூன்றிற் குரவையும் கண்டே”

என்றப் பாடலடிகள் மூலம்அறியலாம் (Rasamanikam, 1947).

இதிலிருந்துகள் போன்ற மதுப்பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு மூங்கில்களைப் பயன்படுத்தி உள்ளமைப் புலனாகிறது. இன்றும் மூங்கிலைப் பயன்படுத்திப் பல்வேறு விதமானப் பொருட்களைச் செய்கின்ற தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளமையைக் காணமுடிகிறது. மூங்கில் கலனாக மட்டுமின்றி அளவையாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## முடிவுரை

பாரம்பரிய புழங்குப் பொருட்கள் உலகமயமாக்கலில் அழிந்து வருகின்றன. பாரம்பரியக் கைவினைச்சாதியினர் அல்லது வேறு சில சாதியினரும் கைவினைப் பொருட்கள் செய்யும் சாதியினராக மாற்றம் பெற்றுள்ள சமூக மாற்றமும் கூட இவ்வணுகுமுறையில் கூடுதல் கவனத்திற்குரியது. இன்றைய போக்கென்பது ஒரு சாதியினர் தங்கள் மரபார்ந்த தொழிலை விடுத்து மரபு சாரா தொழில்களை ஏற்கும் போக்கிற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். புழங்குப் பொருட்கள்

பண்பாட்டின் கண்ணாடி என்பதும் மக்களின் உணர்வுகள், விழுமியங்கள், கருத்தியல்கள், அழகியல், போன்ற பண்புகளைப் புழங்கு பொருட்கள் வாயிலாக மதம் மாறிய கைவினைஞர்களின் பொருள்களில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதும் சிந்தனைக்குரியதாக அமைகிறது. மரபார்ந்த கிராமியக் கைவினைக் கலைகளின் நிலைபேறும் அவற்றைச் செய்யும் கைவினைச் சாதிகளின் சமூக அடையாளச் சிக்கல்களும் இன்றைய சமூக மாற்றத்தின் பொருண்மையோடு இணைத்து அறியப்படுதல் வேண்டும்.

## References


Andal Priyadarshini, (2005) Thaganam, New Century Book House, Chennai, Tamil Nadu, India.

Bhakthavatsala Bharathi, (2002) Tamilar Manidaviyal, Adaiyalam Publications, Trichy, Tamil Nadu, India.

Jeyapal, R., (2004), Akananuru (source and text), 1st Ed, New Centurybook House (P) Ltd., Chennai, Tamil Nadu, India.

Nallamuthu, R., (2021) A Research on Frequently Used Products from Sangam Literature, International Research Journal of Tamil, 3 (4) 6-15. https://doi.org/10.34256/irjt2142

Rasamanikam, R., (1947), Eighteen Lesser Texts (Origin and Text), Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, India.

Vivanantaraca, T., (2021) Archaeological Fundamentals in Eastern Vader Worship Rituals, International Research Journal of Tamil 3 (S-2):158-163. https://doi.org/10.34256/irjt21s231


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License